
பாடம் 4

# என்னை நேசிக்கின்றாயா?

***''அபி, புதுப்பேனாவை மறக்காமல் எடுத்துக் கொண்டாயா?'' என்று அம்மா கேட்க, ''ஆமாம் அம்மா' என்றான். ஆனாலும் அம்மா, மீண்டும் மீண்டும் கேட்டார்கள். உன்னிடம் எவரேனும் இவ்வாறு கேட்டால் எப்படி இருக்கும்? இயேசுவும் பேதுருவிடம் அவ்வாறே கேட்டார். என்னவெனப் பார்ப்போமா?***

இயேசு உயிர்த்த பின்னர் இரண்டு முறை தமது சீடர்களுக்குக் காட்சிகொடுத்தார். சிலுவையில் மரித்த இயேசுகிறிஸ்து உயிருடன் இருப்பது பேதுருவுக்கு இன்னும் பிரமிப்பாகத் தான் இருந்தது. 'நீ என்னை 3 முறை மறுத்தலித்தவன்தானே!' என இயேசு பேதுருவைக் குத்திப்பேசவில்லை; பேதுருவும் தனது தவறான செயலுக்காக தேவனிடம் உண்மையாகவே மன்னிப்புக் கேட்டுவிட்டார். ஆனால் , மற்ற சீடர்கள் பேதுருவைக் குறித்து என்ன நினைத்திருப்பார்கள்? பேதுருவின் மனது அவரை உறுத்திக் கொண்டே இருந்தது. அவரால் நிம்மதியாக இருக்கமுடியவில்லை. ஒருநாள் பேதுரு, மற்ற சீடர்களிடம், ''நான் மீன்பிடிக்கச் செல்கிறேன்'' என்றபோது, சீடர்களில் சிலரும் அவருடன் மீன்பிடிக்கச்சென்றனர். இரவு முழுவதும் முயற்சித்தும் மீன் கிடைக்கவில்லை. மீன் ஒன்றுமில்லாமல் காலையிலே கரையை நெருங்கிய போது, கரையில் நின்ற ஒருவர் ''உங்களிடம் மீன் இருக்கிறதா?'' என வினவ, ''இல்லை'' என்றனர். ஆனால் அவர்களிடம், ''வலையை வலப்பக்கமாகப் போடுங்கள்'' என்றார் அவர். அவரது சொல்லுக்கு மரியாதை கொடுத்து அவ்வாறே வலப்பக்கமாக வலையைவீச, வலை கொள்ள முடியாத அளவு 153 பெரியமீன்கள் கிடைத்தன; வலை கிழியவில்லை.



கரையில் நிற்பவர் 'கர்த்தர்' என யோவான் மகிழ்ந்து சத்தமாகக்கூறினார். இயேசுவைச்

## மனன வசனம்

**நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா? என் ஆடுகளை மேய்ப்பாயாக என்றார்.**

**யோவான் 21:16.**

சீக்கிரமாகப் பார்க்க விரும்பிய பேதுரு பட்டென கடலிலே குதித்து கரையில் நிற்கும் இயேசு வைநோக்கி நீந்திச்சென்றார். மற்றசீடர்கள் மகிழ்ச்சியுடன் வேகமாகப் படகைக் கரையை நோக்கிச் செலுத்தினார்கள். கர்த்தராகியஇயேசுவைக் கண்டு மகிழ்ந்தார்கள். அங்கே இயேசு அவர்கள் சாப்பிடுவதற்காக அப்பமும் மீன்களும் ஆயத்தமாக வைத்திருந்தார். இயேசு தந்த காலை உணவை உண்டனர். ஆனந்தத்தால் அவர்கள் உள்ளம் நிறைந்தது.

பின்னர் இயேசு பேதுருவிடம், ''இவர்களைக் காட்டிலும் நீ என்னிடம் அன்பா யிருக்கிறாயா?'' என்று கேட் டார். பேதுரு, மிகவும் வேக மாக, ''ஆம், ஆண்டவரே! உமக்கும் அது தெரியும்'' என்றார். அப்போது இயேசு, '' என் ஆட்டுக் குட்டிகளை மேய்ப்பாயாக'' என்றார்.

மீண்டும் இயேசு, ''நீ என்னிடம் அன்பாயிருக்கிறாயா?'' என்று கேட்டார்.

அதற்குப் பேதுரு, ''ஆண்டவரே! உம்மை நேசிக் கிறேன் என்பதை நீர் அறிவீர்'' என்றார். இயேசு, ''என் ஆடுகளை மேய்ப்பாயாக'' என்றார்.

மீண்டும் இயேசு, ''நீ என்னை நேசிக்கிறாயா?'' என்றார். மூன்றாம் முறையும் இயேசு இவ்வாறு கேட்கவே பேதுரு துக்கமடைந்தார்.

''ஆண்டவேரே! நீர் எல்லாவற்றையும் அறிந்திருக் கிறீர்; நான் உம்மை நேசிக் கிறேன் என்பதையும் நீர் அறிவீர்'' என்றார். இயேசு, ''என் ஆடுகளை மேய்ப்பா யாக''என்றார்.

இயேசு ஏன் மீண்டும் மீண்டும் இவ்வாறு மற்ற சீடர்



## செய்தி

**பிறரிடம் நாம் அக்கறை காட்டும்போது நாம் இயேசுவுக்குச் சேவைசெய்கிறோம்**

சீடர்களின் முன்பாக, பேதுரு விடம் கேட்டார் என்று கேட்கத் தோன்றலாம். தேவனாகிய இயேசு, பேதுருவை மன்னித்து விட்ட போதிலும் பொறுமையி லும் பிறரை மன்னிப்பதிலும் தம்மைப் போலவே பேதுரு செயல்பட விரும்பினார். எனவேதான் பேதுருவுக்கு இத்தகைய ஒரு பாடத்தைக் கற்றுக்கொடுத்தார். மேலும் தமக்காக பேதுரு எத்தகைய ஒரு மரணத்தைச் சந்திக்கப் போகிறார் என்பதையும் கூறினார்.

பின் பேதுருவிடம், "என்னைப் பின்பற்றிவா" என்றார்.


முழு மனதுடன் தேவனை நேசித்துச் சேவைசெய்தால், பிறரிடமும் நம்மால் அன்பு கூரமுடியும்; கூருவோமா?

**செய்முறை: இன்றைய பாடத்தில் நிகழும் நிகழ்ச்சிகளை படத்தைப் பார்த்து, வரிசைப் படுத்து; கொடுக்கப்பட்டுள்ள வட்டத்திற்குள் அதற்கான எண்ணை எழுதவும்.**











**புதிர் 4**